


*Editor's Note*

Please address all communication for the English pages to The English Editor, 'Morning Star' Uduvil, Chunnakam


# THE MORNING STAR


*Registered as a Newspaper at the General Post Office, Sri Lanka under No. QB/59/300/26/82*

Established: 1841: A Christian Weekly : Published Every Friday

Vol. 143 JAFFNA, FRIDAY, 10th JUNE, 1983 No. 23

RIGHTEOUSNESS EXALTETH A NATION BUT SIN IS A REPROACH TO ANY PEOPLE



*Subscription*

Inland: Rs. 35/- per year.

FOR ADVERTISEMENTS

*Apply to:*

The Manager,

'Morning Star', Vaddukoddai.


## Sacerdotal Golden Jubilee

The Rt. Rev. Dr. S. Kulendran observed his 50th Anniversary on the Ordination as a Minister of the Jaffna Council of the S.I.U.C. on Friday the 3rd of June, 1983. His ordination took place at the Alaveddy Church on the 3rd of June, 1933. It was a historic event for more than one reason. That was the first occasion that all the Ministers of the Jaffna Council of the S.I.U.C. attired themselves in cassocks. This was done by a resolution of the Council. The mover of the resolution was the late Mr. J. C. Amarasingam. Bishop Kuledran's ordination was done according to the rites of the South India United Church. Other events in his life have over-shadowed the ordination. However it is of great significance that the Bishop now can count on 50 long years in the ordained Ministry of the Church.

## New Emergency Regulations

An emergency regulation governing disposal of dead bodies has been gazetted by President Jeyawardene.

Official sources said the regulation was intended to ensure that security personnel, acting against terrorists, will in no way be harassed by the law in the event of being compelled to use their fire power.

However, the service commanders have been told to ensure discipline and ensure that no excesses are committed.

The relevant regulation under Section 5 of the Public Security Ordinance (Chapter 40) reads.

"It shall be lawful for any police officer of a rank not below that of Assistant Superintendent or for the officer in charge of a police station or any other officer or person authorized by him in that behalf to take with the approval of the Secretary to the Ministry of Defence all such measures as may be necessary for the taking possession and burial or cremation of any dead body, and to determine in his discretion the persons who may be permitted to be present at any assembly for the purpose of or in connection with any such burial or cremation.

"Any person who is present at any such assembly without the permission of such officer or authorized person or who obstructs such officer or authorized person in the exercise of the powers herein before conferred shall be guilty of an offence.

"It shall not be necessary for any officer or person taking measures relationg to the possession and burial or cremation of a dead body under this regulation to comply with the provisions of any other written law relating to the inquest of death or to burial or cremation."

[CDN 6-6-83]

## Whitsun Festival at Ashram

The Feast of Pentecost was celebrated as usual at the Christa Seva Ashram, Chunnakam on the three days preceding Whitsunday 22 May 1983. Revs. Issac Selvaratnam and R. Thurairajah conducted Bible Studies in the mornings and the Revs. J. Sarvananthan and S. N. Sugunananthan addressed the meetings in the evenings. It was creditable that the programme could be worked out at the Ashram as planned despite disturbances and tension around Jaffna following local government elections.

## First Asian in British Polls

Sumal C. Fernando, a Lankan lawyer now resident in UK came forward as SDP/Liberal Alliance candidate for the Leicester West constituency when Britain went for the polls on June 9 this year.

He is the first Asian prospective parliamentary candidate of the SDP and was elected by postal ballot.

Before emigrating to the UK in 1977, Mr. Fernando practised as a lawyer at Kalutara bar from 1969 to March 1977. He visited his motherland last year and donated an ambulance to the Health Department.

## Bossey 1983

The programme of the Ecumenical Institute at Bossey for the rest of the year includes, "The Christian Churches' Prayer for Peace" (14 — 24 June) which will examine means for common witness and action and the motivation for peace-making.

"Reformed identity and ecumenical endeavour in Church and society" (June 27 — July 8) will focus on the Reformed contribution to and shaping of ecumenical thinking.

The Graduate School of Ecumenical Studies (15th of October 1983 to 28th February 1984) will have as its theme. "The viseble unity of the church in a divided world."

*Obituary*

*Mrs. Esther Amirtham Samuel Chelliah* mother of Mr. S. P. Jeevananatham Middle School Supervisor St. John's College Jaffna and Mr. Sam Thevabalasingam Director of Every Home Crusade, Colombo passed away on the 21st May 1983. She leaves behind also her sons M/s Jacob Parimelasingam and C. Ratnasingam and a daughter Mrs. Rebecca Dharmalingam. The funeral took place at Ariyalai, Jaffna on Monday the 23rd conducted by the Ven. S. D. Horshington several other priests assisting and the burial at St. James Burial Grounds, Nallur.

— *Cor.*

## A SERVICE OF THANKSGIVING

for the life & Ministry of the late

**Revd. N. W. G. Sugunarajah**

will be held at the

Cathedral Church, Vaddukoddai

on

Saturday the 25th June, 1983 at 4-30 p. m.

all are cordially invited.

Diocesan Office, Vaddukoddai.

**Rev. A. C. Mathanaraj**
Secretary, J. D., C. S. I.

## Memorandum to All Bishops

According to the *Island* (4-6-83) a Memorandum signed by Rev. G. A. Francis Joseph and Rev. Fr. Thevarajan the President and Secretary respectively of the Apostolic Union of Priests Jaffna Diocese, has been sent to the Most Rev. (Dr.) Frank Marcus Fernando President of the Episcopal Conference on behalf of 55 priests of the Mannar and Jaffna Diocese.

Copies of the Memorandum have also been forwarded to all the Bishops of Sri Lanka.

The Memorandum appeals to all the Bishops of Sri Lanka to condemn unequivocally the Prevention of Terrorism Act and the excessive powers vested in the security forces and to request the Government and other leaders to bring about a solution to the problems of the minorities quickly.

## 90 Soldiers Sacked

The Army High Command has sacked 90 members of the crack Raja Rata Rifle Regiment following reports that there has been large scale Absent Without Leave (AWOL).

The soldiers went AWOL when six army men faced charges for causing damage to property in Jaffna following the shooting of a lance corporal on 18-5-83 when he was guarding a polling booth.

Angered colleagues of the dead soldier are reported to have carried out apparent reprisal action against certain shops and houses in the vicinity of the shooting in the belief that some of those places must have granted refuge to the killer gang that shot down the soldier.

— *Daily Mirror 6-6-83.*

*In brief*

O *Of the Five Lakhs worth of books* gifted by the government of Tamil Nad to the Jaffna Public Library, a consignment worth one lakh and twenty thousand has already arrived in Colombo and has been taken delivery by the Indian High Commissioner. The gift is the result of the interest taken in the matter by the Leader of the Opposition, Mr. A. Amithalingam.

## Tamil Language in Video Cassettes

The Tamil University of Tanjavur in Tamil Nadu has planned to bring about video cassettes for the benefit of Tamils living abrod and who are desirous of learning the language.

The move, according to Dr. V. I. Subramaniam, the Vice-Chancellor is inspired by the necessity to teach Tamil language to the younger generation in countries like Mauritius and Fiji where the language is found to be languishing because of the lack of facilities. The younger generation of Tamils who live in Western countries will be greatly benefitted by this move.

## News of Sri Lankans Abroad

Among Sri Lankans abroad who passed away recently are:—

*Dr. C. Singarajah*, a former Engineer at the Chunnakam Power Station died in Surrey on 19-4-83. He had been accepting appointment at various times in Malaysia, Nigeria, Sierra Leone and Libya. Since 1974 he has been a Senior Lecturer in Electrical Engineer in the Richmond — Upon — Thames College in London. He got his Doctorate in 1971. He leaves behind his wife, a daughter and two sons. ●

*Dr. D. R. Sivapiragasam* passed away in Sydney, Australia on 26-1-83. He was the eldest son of Mr. S. S. Sivapragasam, a former Vice-Principal of St. John's College, Jaffna. He leaves behind his wife and his daughter Shamista and son-in-law Suvan de Soysa. ●

*Mr. Hector Aseervatham* returned recently to Sri Lanka from U. K. where he has been till 1968. He died in Sri Lanka on 15-5-83. The funeral took place at 45, Initium Road, Dehiwela. He leaves behind his wife Ranee (nee Sivapragasam) and four children. ●

*Mr. S. R. Arulampalam* till recently of Wembledon has been in the British Rail Engineering Department from 1969 — 1982. He returned recently to his home country and died here on 1-3-73. He leaves behind his wife, two daughters and a son. He is a brother of Paul, Karunamani Niles, Rani Aseervatham and Chandra. Mrs. Arulampalam has returned to UK and is living in Surrey with her daughter Mrs. Chelliah Logendran. ●

# உதயதாரகை

**UTHAYATHARAKAI**

Estd. 1841.

கிறிஸ்தவ வார இதழ்.] [வெள்ளிதோறும் வெளிவருவது.

"நீதி ஜனத்தை உயர்த்தும்; பாவம் எந்தக் குலத்துக்கும் இழிவாம்"

மலர் 143 ] 10 – 6 – 1983 [ இதழ் 23


## விழித்திருந்து செபியுங்கள்

நாள்தோறும் நம் பகுதியில், நடைபெறும் வன்செயல்களை நாம் காணும்போது, இதனால் பாதிக்கப்பட்ட மக்கள், உடைந்த உள்ளத்துடன இரத்தக் கண்ணீர் வடிப்பதை நாம் கேட்கும்போது. இறைவா ஏன் இந்த அவல நிலை? என ஏங்கித் தவித்துச் செயலற்று நிற்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாம் செய்யவேண்டியது என்ன? இப்பிரச்சினைகளுக்கு நம்மால் தீர்வு காண முடியுமா?

மனிதனால் ஆவது ஒன்றுமில்லை. இறைவனால் ஆகாதது ஒன்றுமேயில்லை. இன்றைய பயங்கரச் சூழல் நடுவிலும். இறைவன் செயலாற்றிக்கொண்டேயிருக்கிறார். தமது சாயலாகப் படைக்கப்பட்ட தம் மக்கள் கொடூரமாக அழிக்கப்படுவதை, இறைவன் பேசாது பார்த்துக் கொண்டேயிருக்கிறாரென நாம் எண்ணப்படாது. விழித்திருந்து செபிக்கும்போது, நம் அகக்கண்களால் இறைவனின் செயல்களை நாம் காணலாம். அதன் விளைவுகள் அனைவர்க்கும் புலப்படும் காலம் நெருங்கி வருகிறது.

தீய சக்திகள் எப்போதும் மேலோங்கி நிற்கமுடியாது. வீழ்ச்சி வந்தே தீரும் இதனை நம் வேதத்தில் தெளிவாகக் காணலாம். "அவர் தம் கைவல்லபத்தைக் காட்டினார்; இறுமாப்புடையவர்களையும், அவர்கள் தம் உள்ளத்தில் கொண்டுள்ள திட்டங்களையும் சிதறடித்தார். ஆட்சி புரிவோரை அரியணையினின்று அகற்றினார்; தாழ்நிலையில் இருப்போரை உயர்நிலையில் அமர்த்தினார்" (லூ. 1:51, 52). இறைவனின் திருவுள்ளச் சித்தம் நிறைவேறியே தீரும். அவர் 'சேனைகளின் கர்த்தர்'. நாம் நம்பியிருக்கிற கடவுள்.

கிறிஸ்தவர்களாகிய நாம், ஞாயிறுதோறும் ஆலயத்திற்குப் போய் வந்தும், உயிர்ப்பற்று, அனலுமின்றி, ஊக்கமுமின்றி மந்தமாய்ச் செயலற்று வாழ்வது, கிறிஸ்துவுக்கே இழுக்கை வருவிப்பதாகும் கிறிஸ்துவின் உடன் ஊழியராய் அவருடன் இணைந்து செயலாற்றவே நாம் அழைக்கப்பட்டோம், எனவே எதிர்வரும் துன்பங்களைப் பொருட்படுத்தாது, இயேசுவின் வழியாகிய சிலுவை வழியிற் சென்று, இந்நாட்டில் சமாதானம் நிலவ, அவருடன் சேர்ந்து பணியாற்ற வேண்டும்.

'வேதனைகளின் காலம்' தொடங்கியுள்ளது. இந்நாட்டில் மட்டுமல்ல, உலகெங்கும் இதன் அறிகுறிகளைக் காண்கிறோம். இன்றைய உலகின் போக்கே இதனை நமக்குப் புலப்படுத்துகிறது அன்று நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே இயேசுபிரான் திரும்பி வரும் நாட்களிலும் நடைபெறுமென வேதம் சொல்லுகிறது. ஆகவே நமக்குத் தரப்பட்ட தருணங்களைத் தவறவிடாது செபத்துடன் செயலாற்ற வேண்டும்.

பெருவெள்ளம் வரப்போகிறது, அழிவு நிச்சயம் வருமென நோவா எச்சரித்தான். நோவா பேழைக்குள் புகும் நாள்வரை, அவ்வெச்சரிக்கையைப் பொருட்படுத்தாது, அன்றைய மக்கள் புசித்தும், குடித்தும் தெய்வ பயமற்று, உலகமே தஞ்சமென வாழ்ந்திருந்தனர். கூறியபடி பெருவெள்ளம் வந்தது. அனைவரும் அழிந்தனர். எச்சரிக்கைக்குச் செவிசாய்த்தோர் பேழையில் காக்கப்பட்டனர். இதனை நாம் ஆழ்ந்து சிந்திக்க வேண்டும்.

நம்மிற் பலர், இயேசுவின் வருகையைப் பற்றிய அடையாளங்களைக் கண்டும் காணாதவர்போல், இறைவனுக்கு தாம் செய்ய வேண்டிய பணிகளை மறந்து, சுயநலவாதிகளாய் வாழ்கின்றனர். ஏழைகள், ஒடுக்கப்பட்டோர், வேதனையுற்றோர் ஆகியோர்கருச் செய்யும் பணியே இறைபணியாகும். தன்னையே த்யாகம் செய்து பிறருக்காக வாழ்ந்த நம் இயேசு பெருமானின் அடிச்சுவடுகளைப் பின்பற்றி, நாம் வாழும் பகுதிகளில் அன்புப் பணியாற்ற வேண்டியது நம் கடமை.

இன்றைய காலம், 'கேட்டின் மகன்' வெளிப்பட்டுக் கொண்டிருக்கிற காலமாகும். கிறிஸ்து வரமுன் ' இறுதிக் கிளர்ச்சி " வந்தாக வேண்டும். அக்கிரமமே உருவான மனிதன் வெளிப்பட்டாக வேண்டும். இவனே அழிவிற்குரியவன்... ..அனைத்தையும் எதிர்த்து, அவற்றிற்கு மேலாகத் தன்னை உயர்த்திக் கொள்பவன்...... தன்னைக் கடவுளாகக் காட்டிக்கொள்பவன் ..... தன முழு ஆற்றலினாலும் செயல்புரிபவன இவனே (II தெச. 2: 3 4 9). இத்திருமொழியின்படி இன்று நம நாட்டில சமபவங்கள நடைபெறுகின்றன 'கேட்டின் மகன்' இறுதியில் அழிவது நிச்சயம்.

ஆகவே, நாம் முக்கியமாகச் செய்யவேண்டியது, விழித்திருந்து செபம் செய்வதே இன்று நம் பகுதிகளில் உள்ள துன்ப நிலைக்காக விடாது செபிக்க வேண்டும் அப்போ நாம் செய்யவேண்டிய பணிகள் புலப்படும் தூய ஆவியின் வல்லமையைப் பெற்று பணியாற்ற முன் வாருங்கள். இறைவனின் திருவுளச் சித்தம் நம் நாட்டில் நிறைவேற, நிரந்தர சமாதானம் நில்வ, அவர் கரங்களின் கருவிகளாக நம்மை அவரிடம் ஒப்படைப்போம் வாருங்கள்.

> "அநியாயம் செய்கிறவன் அநியாயம் செய்துகொண்டே இருக்கட்டும். அசுத்தன் அசுத்தனாகவே இருக்கட்டும் நேர்மையானவன் நேர்மையானதையே செய்துகொண்டிருக்கட்டும். தூய்மையுள்ளவன் தூய்மையுள்ளவனாகவே இருக்கட்டும். இதோ, விரைவில் வருகிறேன். ஒவ்வொருவனுக்கும் அவனவன் செய்கைகளுக்குத் தக்கபடி நான் அளிக்கப்போகும் பலன் என்னிடம் இருக்கிறது." — (திருவெளி. 22 : 11, 12.)

## ரஷ்ய வைதீக திருச்சபை

கடந்த ஆயிரம் ஆண்டுகளுக்கு மேலாக சோவியத் யூனியனில் இத்திருச்சபை இயங்கி வருகிறது. 1961ஆம் ஆண்டு நவம்பர் 20ஆம் நாள் புதுடெல்லியில் நடைபெற்ற அகில உலக திருச்சபை மன்றத்தின் மூன்றாவது மாநாட்டின்போது இத்திருச்சபை அம்மன்றத்தின் மிகப் பெரிய உறுப்பினர் சபையாகும்.

1959ஆம் ஆண்டிலிருந்தே இந்தத் திருச்சபை லூத்தரன் சபைகளுடன் இறையியல் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறது. 1960இல் இருந்து ரோமன் கத்தோலிக்க சபையுடன் உறவு கொண்டுள்ளது. 1961ஆம் ஆண்டு பிரேக் நகரில் நடைபெற்ற அனைத்துக் கிறிஸ்தவர் சமாதான மாநாட்டில் கலந்துகொண்டது கொள்கையளவில் அனைத்துத் திருச்சபைகளுடன் இணைந்து இயங்க, ரஷ்ய வைதீக சபை முயன்று வருகிறதென்று அறிகிறோம்.

## அகில இலங்கை திருச்சபை மன்றம்

அகில உலக திருச்சபை மன்றத்தின் மாநாடு, எதிர்வரும் ஜூலை மாதத்தின் இறுதி வாரத்தில், கனடாவிலுள்ள வான்கூவர் நகரில் நடைபெறும். இம்மாநாட்டின் பொருள் — "இயேசுகிறிஸ்து உலகின் உயிர்" என்பதே. இப்பொருளின் பேரில், உயிர் இறைவனின் ஈவு. மரணத்துக்கிடையே வாழ்வு, ஐக்கியத்தில் வாழ்வு என்ற தலைப்புகளில் தியானங்கள் நடைபெறும்.

கம்யூனிச நாடாகிய ஜெர்மன் ஜனநாயகக் குடியரசிலுள்ள டிரஸ்டன் நகரில் 1981 ஆகஸ்ட் 16 — 26 வரை நடைபெற்ற, அகில உலக திருச்சபை மன்றத்தின் மையக் குழுக் கூட்டத்தில், வான்கூவர் நகரில் இம்மாநாடு நடைபெற வேண்டுமெனத் தீர்க்கப்பட்டது. முதன்முறையாக ஒரு கம்யூனிச நாடொன்றில் நடைபெற்ற கூட்டமிது.

இக்கூட்டத்தில் பின்வரும் தீர்மானங்கள் செல்லப்பட்டன:

1. இம் மன்றத்தின் பிரதிநிதிகள் மாநாடு நடைபெறு முன்னர், உறுப்பினர் சபைகளைச் சந்தித்து பேச்சுவார்த்தைகளை நடத்த வேண்டும்.
2. மன்றத்தின் தீர்மானக் குழுக்களில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம இடம் ஒதுக்க வேண்டும்,
3. மக்களை அழிக்கும் சக்திவான நியூட்ரான் குண்டு போன்ற ஆயுதங்களை எதிர்த்துப் போராட வேண்டும்.
4. 'இரட்சணிய சேனை' மன்றத்தின் உறுப்பினர் பதவியிலிருந்து விலகியுள்ளமைக்கு வருத்தம் தெரிவித்தது. புதிதாக இணைந்துள்ள மூன்று ஆபிரிக்க பிரெஸ்பிடீரியன் சபைகளை வரவேற்றது.
5. ஆஸ்திரேலியப் பழங்குடிகள் படும் இன்னல்களைப் பற்றி அகில உலக திருச்சபை மன்றம் தயாரித்த அறிக்கையை, ஐக்கிய நாடுகள் சபைக்குச் சமர்ப்பித்து, அவர்களுக்காக வாதாடும்படி தீர்த்தது
6. உலகெங்கும் பரவி வரும் அகதிகள் பிரச்சினையைச் சமாளிக்கும்படி, நூற்றுக்கும் மேற்பட்டுள்ள நாடுகளில் உள்ள உறுப்பினர் சபைகளைச் செயல்படத் தூண்டியுள்ளது.

## நன்றி செலுத்தும் ஆராதனை

அமரர் இராமலிங்கம் தந்தையா தியாகராசா அவர்களின் வாழ்க்கைக்காகவும் பணிகளுக்காகவும் நன்றி செலுத்தும் ஆராதனை, யாழ். புனிதர் பேதுரு ஆலயதில், அருள் திரு. H. S. R. ஜெயச்சந்திரன் அவர்கள் தலைமையில் மே மாதம் 28ஆம் திகதி (28-5-83) பி. ப. 4-30 மணிக்கு நடைபெற்றது.

அன்னாரின் மருமகன் அருள் திரு. ஜோன் D. ஜெகசோதி, மகன் அருள்திரு. டானியல் S. தியாகராசா ஆகியோரும் இவ்வாராதனையில் பங்கெடுத்தனர். அருள்திரு. சேவக் சாம் அல்பிறெட் இரங்கலுரை வழங்கினார். திரு. M. இராஜசேகரன (மருமகன்), செல்வி S. M. தியாகராசா (மகள்) ஆகியோர் வேதப் பாடங்களை வாசித்தனர். திருமதி தயாவினி தியாகராசா (மருமகள்) சிறப்புப் பாடல் பாடினார். குடும்பத்தினரும் சேர்ந்து சிறப்புப பாடல் ஒன்றைப் பாடி ஆராதனையைப் பக்தி மயமாக்கினர். பேராயர் அருட்பெருந்திரு. D. J. அம்பலவாணர் அவர்கள் அருளுரை வழங்கினார்.

ஆராதனையின் பின் அனைவர்க்கும் நிமமர் மண்டபத்தில் தேநீர் விருந்துபசாரனை நடைபெற்றது.

## செய்தித் திரட்டு

● **பேராசிரியர் இராமநுஜன்:**

அமெரிக்காவின் சிக்காகோ பல்கலைக் கழகத்து மொழியியல் பேராசிரியரும், தலைசிறந்த தமிழ் அறிஞருமான டாக்டர் ஏ. கே. இராமனுஜன் அவர்களும் துணைவியாரும், கொழும்பில் பேராசிரியர் கைலாசபதி நினைவுப் பேருரையை ஆற்றிய பின்னர் யாழ்ப்பாணம் வந்துள்ளனர்.

திங்கள் 6-6-83 இல் யாழ் பல்கலைக்கழகத்தில் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையை வழங்கினார். "பழந் தமிழ் இலக்கியம்" என்ற பொருளில் சிறந்த உரையாற்றினார்.

● **குரு அபிஷேகம்**

உரும்பிராயைச் சேர்ந்த கனம் ஜெயரத்தினம் நோர்மன் ஜெயச்சந்திரன் அவர்கள் இலங்கைத் திருச்சபையின் உதவிக் குருவாக கொழும்பு திருமண்டலப் பேராயர் அருட்பெருந்திரு. சுவீதின் பெர்னாண்டோ அவர்களால் அபிஷேகம் செய்யப்பட்டு, திருநிலைப்படுத்தப்பட்டார். இவ்வாராதனை கொழும்பு திருமண்டல ஆசன திருக்கோவிலில் வாழ்கின்ற கிறிஸ்துநாதர் ஆலயத்தில் நடைபெற்றது.

கனம் ஜெயச்சந்திரன் பிலிமத்தலாவை இறையியல் கல்லூரியில் நான்கு ஆண்டுகள் இறையியல் பயிற்சி பெற்று, குருவாக வெளியேறியுள்ளார். இவர் கோப்பாய் புனித மரியாள் ஆலயத்தின் குருவாக நியமனஞ் செய்யப்பட்டுள்ளார்.

● **இந்தியாவில் கடும் வெப்பம்:**

இந்தியாவில் சில பகுதிகளில் நிலவி வரும் கடும் வெப்பத்தின் காரணமாக இதுவரை சுமார் 150 பேர் கொல்லப்பட்டனர். ஆந்திர மாநிலத்தின் சில இடங்களிலும் வெப்பத்தால் உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளன. வேறு மாநிலங்களிலும் வெப்பம் மிக அதிகம்.

இதேவேளை தமிழ்நாட்டில் பலத்த மழை பெய்கிறதாக அறிவிக்கப்பட்டது.

## சிந்தியுங்கள்!

### ஏழ்ந்த கைப்பு!

○ கவலைகளைக் கழுவ கடவுள் கண்ணீரைக் கொடுத்துள்ளார். அதனாற்றான் கண்ணீர் சுவைப்பதில்லை......கைக்கிறது

(3-ம் பக்கம் பார்க்க)

# சுக வாழ்வு வேண்டுமா ?

"மருத்துவ மாமா"

பலவிதமான மாத்திரைகளும், மருந்துகளும் பரவியுள்ள காலமிது. தலைவலி, தடுமல், நெஞ்சு வலி போன்ற எல்லா வலிக்கும் மாத்திரைகளை விழுங்கிறார்கள் நம்மிற் பலர். அமெரிக்காவில் மட்டும் ஆண்டொன்றுக்கு மூன்று இலட்சம் பேர் தவறுன மருந்துகள் எடுத்துப் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 10,000 பேர் இதனுல் வாழ்நாள் முழுவதும் பாதிக்கப்படுகிருர்கள் என அறிகிறோம்.

பல மருந்துகளுக்குப் பின் விளைவுகள் உண்டு. ஒவ்வொருவரின் உடல் நிலைக்கு ஏற்பவே மருந்துகள் செயல்படும். ஒரு குறிப்பிட்ட நோய்க்கு ஒருவருக்கு அளிக்கப்பட்ட மருந்து, அதே நோய் கொண்ட மற்றொருவருக்கு நச்சுப் பொருளாக அமையலாம். ஆகவே, வைத்தியரின் ஆலோசனையின்றி கண்ட மருந்துகளை உட்கொள்வது தவறு. இது உங்கள் உடல் நலத்தை பாதிக்கும் என்பதை அறிக.

**நீங்கள் கவனிக்கவேண்டியவை**

1. மருத்துவரைத் தவிர வேறு எவருடைய ஆலோசனையின் பேரில் மருந்துகளை உட்கொள்ள வேண்டாம்.

2. தலைவலி, காய்ச்சல், வயிறுளைவு, வெட்டுக் காயம் சிராய்ப்பு போன்ற சிறு நோய்களுக்கு நாமே மருந்து எடுக்கிறோம். பெரும்பாலும் இதனுல் அபாயமிருப்பதில்லை- எனினும். இத்தகைய சிறு நோய்கள் வேறு பெரிய நோய்களுக்கு அடையாளங்களாகவும் இருக்கலாம்.

ஆகவே, நோய் சீக்கிரம் சுகப்படாவிடில், உடனடியாக மருத்துவரை அணுகுவது அவசியம். இதைவிடுத்து. தொடர்ந்து நாமே மருந்து உட்கொண்டுவந்தால், மூலகாரணமான அப்பெரும் நோயைக் குணப்படுத்துவதற்குத் தருணம் கிடைக்காமல் அபாயம் நேரிடலாம்.

3. நீங்கள் ஒரு குறிப்பிட்ட வைத்தியரிடம் சிகிச்சை பெற்று வரும்போது. அவர் கூறுத வேறு சிகிச்சைகளை நீங்கள் செய்விப்பது அபாயத்தை விளைவிக்கும். சில மாத்திரைகள் ஒன்று சேரும்போது. பெரிய பின் விளைவுகளை ஏற்படுத்தும்.

ஒரு மருத்துவரிடம் சிகிச்சை பெறச் செல்லும்போது ஏற்கனவே வேருெரு மருத்துவரிடம் சிகிச்சை பெற்றிருந்தால், அந்த மருத்துவச் சீட்டையும் உடன் எடுத்துச் செல்ல வேண்டும். சில வேளைகளில் வெவ்வேறு மருந்துகளை உட்கொள்ளும்போது, இரைப்பையில் இரத்தக் கசிவு ஏற்படலாம்.

4. வீட்டில் உங்கள் குடும்பத் தேவைகளுக்காக ஒரு மருந்துப் பெட்டி வைத்திருந்தால், இதைக் கவனியுங்கள். அதிலுள்ள மருந்துகள் தெளிவாக எழுதி வைக்கப்பட்டிருக்க வேண்டும். காலவரையறை முடிந்துபோன மருந்துகளை உடனடியாக அகற்ற வேண்டும். சிறு பிள்ளைகளின் கைக்கு எட்டாத இடத்தில் மருந்துகளை வைத்தல் வேண்டும்.

5. கர்ப்பமாய் இருக்கும் பெண்கள் மருத்துவரின் அனுமதியின்றி எந்த மருந்துகளையும் உட்கொள்ளக்கூடாது. சில மருந்துகள் குழந்தையை பாதிக்கக் கூடியவை.

6. கிருமி நாசினி (Antibiotics) மருந்துகளை நீங்களாகவே வைத்தியரின் ஆலோசனையின்றி உபயோகிக்கப்படாது. இவை அபாயமான மருந்துகள், மருத்துவர் சொல்லுகிற படியே கவனித்து இம் மருந்துகளை எடுத்தல் வேண்டும். குறிப்பிட்ட நாட்கள்வரை தான் இம்மருந்துகளை உட்கொள்ள வேண்டும்.

இடையே சிறிது சுகம் காணப்படும்போது மருந்தை நிறுத்திவிட்டால் மருந்து — எதிர்ப்புக் கிருமிகள் பெருகிவிடலாம். கிருமிகளின் ஒரு பகுதி இறந்தவுடன் மருந்தை நிறுத்திவிடும்போது, மீதிக் கிருமிகள் பெருகி மீண்டும் தாக்கலாம். இந்த மறு பாதிப்பு அபாயத்தை விளைவிக்கலாம்,

எனவே, மருத்துவரிடம் மருந்தை எத்தனை நாட்கள் தொடர்ந்து உட்கொள்ள வேண்டும் என்று தெளிவாகக் கேட்டு அதன்படியே செய்வது நல்லது.

7. மருத்துவர் குறிப்பிட்டுள்ள அளவுக்கு அதிகமாகவோ, குறிப்பிட்டுள்ள நாட்களுக்கு மேலாகவோ மருந்துகளை உட்கொள்ளாதிர்கள்.

8. புதிய மருந்து வகைகளை உபயோகிப்பதில் அவசரப்படாதீர்கள். இரண்டு மூன்று வருடங்கள் உபயோகிக்கப்பட்ட பின்தான் அதன் முழுப் பயனையோ, பின் விளைவுகளையோ அறிய முடியும்:

9. மருந்துகளின் மேலே போடப்பட்டுள்ள விவரங்களைத் தெளிவாகப் படித்து அதன்படி உட்கொள்ளுங்கள். குறிப்பிட்ட அளவுக்குமேல் மருந்துகளை உட்கொண்டால். அதன் விளைவாக உடலில் வேறு நோய்கள் உண்டாகும்,

"அலர்ஜி" Allergy

சிலவகையான மருந்துகள் சிலருக்கு எதிர் விளைவுகளை உண்டாக்கும். இதனுல் உயிரிழக்கும் அபாயம் கூட நேரிடலாம்; உயிர் காக்கும் பென்சிலினையும சிலரின் உடம்பு ஏற்றுக்கொள்ளாதபடியால், அதனுல உயிர் இழந்தோர் அநேகர். ஏறத்தாழ பத்தில் ஒருவருக்கு பென்சிலினும் மற்றும் சில தடுப்பு மருந்துகளும் ஏற்றுக்கொள்வதில்லை. எனவே உடலின் ஏற்றுக்கொள்ளும் தன்மையை அறிந்த பின்னரே, இவற்றை உட்கொள்ள வேண்டும்!

நமது உடம்பு ஏற்றுக்கொள்ளாத மருந்துகளை மறக்காமல் குறித்து வைக்கவேண்டும். அடுத்த முறை வைத்தியத்திற்காக மருத்துவரிடம் செல்லும்போது இதை அவருக்குக் கூற வேண்டும்.

மதுபானம்

10. மதுபானம் அருந்தும் வேளையில் சில மருந்துகளை உட்கொள்வது உயிருக்கே ஆபத்தானது. மதுபோதையில் இருப்போர் ஒரு தூக்க மாத்திரையினுல் கூட உயிரிழப்பதுண்டு.

Amphetamine மாத்திரைகளுடன் சேர்ப்பியோ, சோடாவோ குடித்தால் போதை, குழப்பநிலை, மயக்கம் ஆகியவை நேரிடலாம்,

பலவகையான நோய்களிலிருந்து நம்மைக் காப்பாற்றுவதற்கு மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. ஆனுல், அவற்றைப் பயன்படுத்துவதில் தவறுகள் ஏற்படுவதனுல் பல அபாயமான பின் விளைவுகள் ஏற்படலாம். இதனை உணர்ந்து கவனமாக குறிக்கப்படும் மருந்துகளை உட்கொண்டு சுக வாழ்வைப் பெற்று இன்பமாய் வாழுங்கள்.

(முற்றும்)

## நன்றி செலுத்தும் ஆராதனை

அமரர் அருள்திரு.
N. W. G. கருணாகரா
அவர்களின்
வாழ்க்கைக்காகவும்
திருப்பணிக்காகவும்

நன்றி செலுத்தும் வழிபாடு

தெ. இ. தி. வட்டுக்கோட்டை தேவாலயத்தில் ஜூன் 25-ம் நாள் 1983 சனிக்கிழமை பி. ப 4-30 மணிக்கு நடைபெறும்.

அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

வண. A. C. மதனராசா
செயலர், யா. பே.,
தெ. இ. தி.

பேராயப் பணியகம்
வட்டுக்கோட்டை

## மருத்துவச் செய்திகள்

● **ஆஸ்பிரின் மாத்திரை**

சிறுவர்களுக்கு ஆஸ்பிரின் மாத்திரை கொடுப்பது நல்லதல்ல என்று அமெரிக்க ஆய்வாளர்கள் எச்சரிக்கை செய்துள்ளனர். அம்மை, நச்சுக் காய்ச்சல் போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டுள்ள சிறுவர்களுக்கு ஆஸ்பிரின் மாத்திரைகளைக் கொடுப்பது "Reye Syndrome" என்ற நோய் ஏற்படக் காரணமாகலாம் என்கின்றனர்.

தொடர்ந்து வாந்தி எடுத்தல், அதிகக் களைப்பு இவையே இந்நோயின் அடையாளங்கள். இந்த நோயால் பீடிக்கப்படும் சிறுவர்களில் 13 சத வீதத்தினர் இறந்து போகிருர்கள்.

● **ஆண்களும் பிள்ளை பெறலாம்!**

ஆண்களும் பிள்ளை பெறலாம் என்று இரு மெல்பர்ன் மருத்துவ ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சோதனைக் குழாயில் உருவான கருவை, ஆணின் வயிற்றில் வளரச் செய்து. "சிசேரியன்" அறுவை சிகிச்சை மூலம் பிள்ளையை வெளிக் கொணரலாம் என்று கூறுகின்றனர். டாக்டர் ஜியாப்ரே தார்பான், டாக்டர் றிச்சாட் ஹார்டிங் ஆகிய இவ்விருவரும், தாயின் வயிற்றில் வளரும் சிசுவைத் தாய் கட்டுப்படுத்த முடியாது; சிசு தானுகவே வளருகிறது; தான் பிறக்கும் நேரத்தையும் தானுகவே கணித்துக்கொள்கின்றது. தாயின் உடலை அது வளரும் இருப்பிடமாகவே கொள்கிறது என்று கண்டு பிடித்துள்ளனர்!

## சிந்தியுங்கள்!

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

○ நாம்பில்லா நாக்கு, வரம்பில்லா ஆசை இவை இரண்டும் செயலிழக்குமானுல்...... உலகில் நீதியும் நேர்மையும் நிச்சயம் நிலைக்கும்.

○ மக்கள் தம் வாக்குகளால் தரமான தலைவர்களைத் தெரிவதில்லை ஆயினும் சுத்த அயோக்கியர்களை இனங்காட்டுகிருர்கள்.

—(புதிய உலகம்)

## திருமணம்

யாழ். பேராயத்தின் கொழும்புச் சபையைச் சேர்ந்த திரு. அ. இ. முத்துபண்டா அவர்களுக்கும், ஆனைக்கோட்டை சபையைச் சேர்ந்த செல்வி அ. மெ பாலகாமினிக்கும், ஜூன் 1ஆம் நாள் பி. ப. 4-00 மணிக்கு, மானிப்பாய் தேவாலயத்தில் அருள்திரு. டி. ஆர் அம்பலவாணர் அவர்களால் திருமணம் நிறைவேற்றப்பட்டது.

மணமகனின் ஆதரவாளர் திருமதி செபரத்தினம், திரு. கோர்டன் துரைசாமி குடும்பம், மணமகளின் ஆதரவாளர் டாக்டர் நத்தானியேல் குடும்பம் ஆகியோர் மணமக்களை ஆசீர்வதித்தனர்.

ஆனைக்கோட்டையில் உள்ள டாக்டர் நத்தானியேல் அவர்களின் இல்லத்தில் அனைவர்க்கும் விருந்துபசாரனை நடத்தப்பட்டது.

## வசந்தத்திற்காக ஒரு சொட்டுக் கண்ணீர்!!

மண்
மழைக்காக வரவேற்பு விழா
நடத்தக் காத்திருக்கிறது.

ஆனுல்
வசந்தம் வர மறுத்ததினுல்
வானம் மழையை விவாகரத்துச்
செய்துவிட்டது.

மண்ணின்
வெடிப்புகள் ஏழையின்
எலும்புக் கூடுகளாய் தெரிகிறது.

உன்
தாகச் சூரியனின் கதிர்கள்
மெய்யாக மெய்யை எரிமலையாய்
சுடுகிறது.

மழைக்காக
நாமவிட்ட ஏக்கப் பெருமூச்சுக்கள்
அனல் காற்றுகளாய் மாறி
எம்மையே சுற்றி வருகிறது.

தினம் தினம் வெம்மைக்
குழந்தைகளைப் பிரசவித்தே
எங்கள் கருப்பைகள் கூட
கறள் பிடித்துவிட்டன

மண்ணின் மைந்தர்கள்
மழைக்காக அழைப்பு மனுக்கள்
அனுப்பியும்
வானத்து நீதிமன்றத்தில் அவை
இன்னும் விசாரணைக்கே
எடுத்துக் கொள்ளப்படவில்லை

ஏ. !!. வானமே,
மண்ணிலிருந்து
நீரையெல்லாம் உறிஞ்சி
மறைத்து வைத்திருந்து
கறுப்புச் சந்தையா நடத்துகிருய்

ஆதவனுக்கேங்கும்
தாமரைபோல
உன் வரவிற்காக
எங்கள் நாட்டில்
மரங்கள்
நாளும் இலையுதிர்க்கின்றன.

உன்னேடு உறவு கொள்ள
பயிர்கள் மோகம்
கொண்டு நிற்கின்றன
நீயோ மேகத்தில் மறைந்து
நின்று வேடிக்கை பார்க்கின்ருய்.

மண்மீது
உனக்குள்ள கோபத்தை
மறந்துவிடு இல்லையேல்
தண்ணீர் எங்கேயிருக்கிறது
என்ருெருவர் கேட்டால்
அதுவா மியூஸியத்தில்
இருக்கிறதென்று
பதிலிறுக்க வேண்டி வரும்.

இது தாகம் எடுக்கிற நேரம்
இங்கு இதயம் சுடுகிற காலம்
அங்கு மேகம் கறுத்திடும் நேரம்
மண்ணில் இசைந்து வந்திடும்
வசந்தம்.

வி. செ. நீதிதேவன்
யாழ்ப்பாணக்கல்லூரி.

*EDITORIAL*

## Collective Action, the need of the Hour

Where will it lead? This is the question in the minds of every citizen in this country who finds himself today in the vortex of a terrible symmetry of action and interaction, assault and counter-assault, hatred and responsive hatred.

President Jeyawardene has appealed to the people to maintain law, order and peace. For, as he has said if 'terrorism' is to be wiped out in the North, it cannot be done if people in other parts of the country take it in their own hands to adopt terrorist tactics against the Tamil community living in their midst.

Said the President at the *Gam Udawa '83 Exhibition* at Nikarawatiya:—

"If some people were to break shops belonging to Tamil people, destroying houses of others and harassing or killing them on the ground that they belonged to another community, such acts would be an obstacle to the steps being taken by the government to curb terrorism."

According to a news report in the CDN of 8-6-83, a total of five shops have been gutted by fire at Panadura and the damage estimated at Rs. 1 million.

The LSSP on the same day (8-6-83) has appealed to people of good will to help to put a stop to what Mr. Bernard de Soysa called the "Outrageous violence" that had occurred at some places in recent days.

Said the veteran LSSP leader and General Secretary of the *Lanka Sama Samaja Party*:—

"We cannot leave everything to the authorities. We must intervene in the situation overselves *collectively*.

Such intervention requires first of all that we act together prevent those things happening *in our localities, that is to say where we live, where we work and where we travel daily.*"

(Italics are ours)

It is a happy augury that all political leaders in the country have now felt that *collective action* is necessary to put an end to the unprecedented explosion of corrosive hostilily between the two major communities in the country.

Those who condone violence should face up to the fact that the paroxysms of public disorder have led already to some counter measures which neither the government or the people are happy about— and can be happy about.

In this grim context we endorse the sentiment expressed by the General Secretary of the LSSP that the only way to solve the problem of the escalation of hatred is for the moderates on each side to cope with the haters and doers of violence, *within their own ranks.*

To date, the moderates in the country have been all too silent. It was perhaps predictable. Moderates are alike, whatever their race. They don't want to get involved. They don't like trouble. But increasingly the extremists are giving them trouble whether they like it or not.

The time has come we believe for "a revolt of the moderates" which has to go on, day in and day-out in offices, factories, homes and clubs. This has to be done in Sri Lanka in an organised manner if we are to care about the future of our society.

The Christian Church in Sri Lanka has a special responsibility to give a lead in this campaign of "a revolt of the moderates.

For, the Church is placed, as in the days of our Lord in the midst of a crowd that is "harassed and helpless". The multitudes that form this 'crowd' are illiterate, ignorant, unorganised and often exploited. The crowd is not just a collectivity of uncommitted folk but a distinct sociological group. While religions thrive in Sri Lanka, human beings in this crowd are reduced in worth to mere play things. The Church should find the meaning of its existence in relation to this 'crowd'.

### Alliance Francaise

The *Alliance Francaise*, founded in Paris on July 21, 1983 with the object of spreading the French language and French civilisation abroad, is celebrating its Centenary this year. Events to mark this centenary will be held all over the world throughout the year.

Already the French Minister of Postal Services and Telecommunications has decided to issue the publication of "a golden book" of 250 pages by the "Editions Hachette".

The final key event will be a Centenary World Congress which will be held from October 17 to 19 this year.

The *Alliance Francaise* has today some 1000 committees spread across the world with nearly 250,000 students who attend its schools and colleges in the Five continents.

### West London Tamil School

The Annual Prize Giving of *Greenford High School* will take place on the 16th July at 6.30 p.m. The Chief Guest will be the Rt. Hon. Dr. Rhodes Boyson, M.P., Minister of Education.

*JDCSI*

### Evangelistic week activities at K. K. S.

The Kankesanthurai Church had the following programmes during Evangelistic week. On Sunday the 29th some members of the K. K. S. Church under the leadership of Mr. Prince Ratnam, the Worker in Charge of the Church, visited some homes around the Myliddy Sanatorium. Tracts were distributed and short Gospel messages were given. At 10·00 a. m. on the same day a special service was held at the Sanatorium Chapel. Mr. Prince Ratnam conducted the Service. Mr. Marisal Saram preached the Sermon. A Special Prayer was said by Mr. C. Stanislaus. It was very encouraging to see that several non Christians too attended this Service. At 6-30 p. m. a special service was held at the Keerimalai Chapel. The Service was conducted by Mr. Kirubairajah Chelliah.

On Friday the Worker in Charge and some members of the Church visited some homes around Keerimalai Road. Tracts were distributed and short Gospel messages were given. At 6-30 p. m. the Film 'The Robe' was screened at the Sanatorium Chapel. Mr. C. Stanislaus of Myliddy while welcoming all those who were present said that he was very grateful to the J. D. C. S. I. and The Jaffna Christian Union for making arrangements to hold regular Sunday Services at the Sanatorium Chapel. Mr. Prince Ratnam, Chaplain of the Sanatorium, thanked the Hospital Staff, The Rev. R. Thurairajah, Director of the Christian Commuications, Pastor S. Anandham and Mr. Ebenezer for all the help they had given him in his work at the Sanatorium. He also said that he was very grateful to Rt. Rev. D. J. Ambalavanar, the Revds. D. R. Ambalavanar, S. N. Sugunanandhan, S. Manobavan and Sam Alfred for all the help and guidance they render to the work at the Sanatorium. The days programme terminated with a Prayer by Pastor Anandham of the Christian Communications.

### State of the World's Children

UNICEF's annual *State of the World's Children* reports that 17 million children under five died in 1981. Less than 10 per cent of Third World children are immunised against the six most common and dangerous childhood diseases.

"We are", says the Report in another year of silent emergency of 40,000 children quietly dying each day of 100 million quietly going to sleep hungry at night, of ten million children quietly becoming disabled in mind and body of 200 million 6 to 11 olds quietly watching other children go to school, of one-fifth of the world's people quietly struggling for life itself.

### New Editor of "One World"

The New Editor of "One World" as from the beginning of this year is *Marlin VanElderen*, 36 an American who was Vice President and Editor-in-Chief of Wm B. Eerdmans Publishing Company in Grand Rapids, US.

Mr. VanElderen is a member of the Christian Reformed Church and has been Chief Editor of the *Reformed Journal* for four years.

He spent almost a year at the Geneva Office of the WCC (1986—82) as interim publications Editor. He is married and has four daughters.

Bruce Best, the former Editor has returned to Australia his home country, for family reasons.

## Reflections on the Role of the Humanities in a Democratic Culture

**[ Excerpted from the Bunker Memorial Lecture deliverd by Professor John Walter Bicknell at Trimmer Hall on 22-3-83.]**

*(Continued from our last issue)*

How do we answer these charges? There are, I think, three ways of dealing with them. My first approach will be to accept the charge, but to challenge the assumption that because a work of art or literature or philosophy has been composed by a member of a ruling group it necessarily has no value whatever for a democratic culture. My second answer will be to assert that in ancient and modern history, the humanities have served a democratic culture. My third answer will try to suggest the ways in which the situation in the humanities is changing; the content of materials for teaching them is expanding enormously as more and more material about the neglected dramatis personae of history and literature and art is being recovered and displayed.

To take up my first position in more detail, are we to assume that no member of a ruling group can ever see anything truly, or express any sympathy for the rest of humanity, or endorse values that might be treasured in a democratic society, or even be able to transcend the values of his or her own class? The question has only to be asked in this rough-hewn way for us to realize the emptiness of the assumption. If an aristocratic culture decides that honesty is a useful virtue, that hardly disqualifies it as a virtue useful to a democratic culture. I need not labor the obvious. What I would prefer to dwell on are those moments when a great writers of the past has transcended the values of his class and opned the eyes of his readers to a new dimension of being. I shall begin with Homer, whose *Iliad* was to the Athenian democracy what the *Mahabharata* has been to India.

*Registered as a Newspaper at the G. P. O., Sri Lanka under No. QB./59/300/26/82.*

Printed for the Jaffna Diocese of the Church of South India at Sri Sanmuganatha Press, Kankesanthurai Road, Jaffna on Friday, 10th June 1983 and published by Mr. Alvappillai Rajasingam, 330. Navalar Road, Jaffna.